ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2051/45 - 2017 දෙසැම්බර් මස 31 වැනි ඉරිදා - 2017.12.31
*2051/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2018, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியொன்றுக்கு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

மங்கள சமரவீர,
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, திசெம்பர் 31.*

1A - PG 3849 — 532 (2018/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01 | 10.06 | | அரிசி | |
| | | 1006.20 | உமி அகற்றிய அரிசி (தவிடு நீக்காத அரிசி) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 |
| | | 1006.30 | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை அல்லது மெருகூட்டப்படாதவை, பளபளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளப்பாக்கப்படாதவை | |
| | | 1006.30.10 | பச்சை அரிசி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 |
| | | 1006.30.20 | குத்தரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 |
| | | 1006.30.30 | சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 |
| | | 1006.40 | உடைத்த அரிசி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 |

01- 448

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.